In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi

Case No : OS.237/2024

Deposition of PW.1

****

Name திரு.முத்துக்குமார்

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 4th day of June 2026.

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் என்னுடைய சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன் அதில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை அனைத்தும் நான் சொல்லி எனது வழக்குரைஞரால் தயாரிக்கப்பட்டதாகும். அவற்றை நான் படித்து பார்த்து கையொப்பம் இட்டுள்ளேன். அதனை எனது முதன்மை சாட்சியமாக கருத வேண்டுகிறேன்.

எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களைத் தாக்கல் செய்கிறேன். அவையாவன:

01.08.2022 அன்று பிரதிவாதி எனது பெயருக்கு எழுதிக் கொடுத்த புரோ நோட் அசல் வா.சா.ஆ.1, 21.09.2024 அன்று வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் வா.சா.ஆ.2, 25.09.2024 அன்று பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.3,.

வாதி கோரிய பரிகாரம் செலவுத் தொகையுடன் தீர்ப்பும் தீர்ப்பாணையும் பெற பிரார்த்திக்கிறேன். பிரதிவாதி இல்லாததால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/–S.சுபாதேவி,
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தூத்துக்குடி.**